**Crl.MP.No.915/2025**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.04.2026**

**சாட்சி –1**

**பெயர் – சிவஞானம் (25) த/பெ. சுப்பிரமணி, மேல் எடையாளம்**

1. கடந்த டிசம்பர் மாதம் 2024 அன்று காலை சுமார் 08.00 மணியளவில் எங்களுக்கு சொந்தமான காலி மனையை மணக்கோள் செய்ய சென்றிருந்தோம். அப்போது எனது சித்தப்பா கனேசன் என்பவர் அங்கு வந்து மேற்படி இடம் அவருக்கு சொந்தமானது என்று கூறினார். அதில் எனக்கும் அவருக்கும் பிரச்சனை ஏற்பட்டது. மேற்படி கனேசன் என்பவர் என்னை கையில் கடித்துவிட்டார். எனது அம்மாவையும் அடித்துவிட்டனர் அதில் அவருக்கு கால் உடைந்துவிட்டது. மேற்படி சண்டையின்போது அவரது மனைவி விஜயலட்சுமி, அவரது மகன் இளவரசன் மற்றும் அவரது மகள் தேவி ஆகியோர்களும் இருந்தனர். அவர்களும் எங்களை தாக்கிவிட்டனர். எனவே மேற்குறிப்பிட்ட நால்வர் மீதும் வழக்கினை கோப்பிற்கு எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.